REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2020 டிசம்பர் 22 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 88 இல. 303 | December 22 ,Tuesday, 2020 | 16பக்கங்கள் | 30/-

வீட்டிலிருந்தவாறு மொபிடெல் உடன் இணைந்து வேலை செய்யுங்கள், கல்வி பயிலுங்கள்
25GB ரூபா. 150/-
+ வரிகள்
செயற்படுத்துவதற்கு அழையுங்கள் #170#
*விசேடமாக தெரிவு செய்யப்பட்ட பிளேட்போம்களுக்கு மட்டுமே
TRC/M/Promo/20/02
4G LTE
Sri Lanka Telecom Mobitel

மேல் மாகாணம் மற்றும் தனிமைப்படுத்தல் பகுதிகள் தவிர்ந்த

## ஆரம்ப பாடசாலைகள், முன்பள்ளிகளில் ஜன. 11இல் கல்வி நடவடிக்கை ஆரம்பம்



கல்வியமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் நேற்று அறிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மேல் மாகாணம் மற்றும் தனிமைப்படுத்த லுக்காக முடக்கப்பட்டுள்ள பகுதிகள் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் அனைத்து பாடசாலைகளின் 1-5 வரையான வகுப்புகள் மற்றும் முன்பள்ளி பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும்

06

## சமூக ஊடகங்களை பயன்படுத்துவோரை பதிவு செய்வது அரசாங்கத்தின் நோக்கமல்ல

உண்மை அர்த்தம் விளக்கப்படவில்லை என்கிறார் ஊடகத்துறை அமைச்சர்



சமூக ஊடக ஒழுங்குமுறை தொடர்பாக வெளியாகும் செய்திகள் உண்மையான அர்த்தத்தை தெரிவிக்காமல் திரிபுபடுத்தப்பட்டு சித்தரிக்கப்பட்டுள்ளது என ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து பேசிய அவர்,...

சமூக ஊடகங்களை பயன்படுத்துவோரை பதிவு செய்வதற்கு விசேட வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக கருத்து தெரிவித்திருந்தார்.

06



புனரமைக்கப்பட்ட அனுராதபுரம் ஜேதவன தொல்பொருள் அருங்காட்சியகம் மற்றும் உள்ளக சாலை அமைப்பு என்பன புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும், பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவினால் நேற்று (21) திறந்துவைக்கப்பட்ட போது....

தனிமைப்படுத்தல் சட்டங்கள் முறை

## பயணிகள் போக்

## ரயில்களில் 400






நேற்று முதல் சிவில் உடையில் கண்காணிப்பு பணியில் ஈடுபாடு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

தனிமைப்படுத்தலுக்கான சட்டங்கள் முறையாக பின்பற்றப்படுகிறதா? என்பதை கண்காணிக்கும் வகையில் பயணிகள் போக்குவரத்து பஸ்களை கண்காணிப்பதற்காக சிவில் உடையில் 400 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். பயணிகள் பஸ்களில் சுகாதார வழிகாட்டல் நடைமுறைகள் முறையாக பின்பற்றப்படுகின்றனவா? சாரதி மற்றும் நடத்துனர்களின் செயற்பாடுகள் எவ்வாறு உள்ளன? என்பதை கண்காணிக்கும் வகையிலேயே சிவில் உடையில் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அதேவேளை. தனிமைப்படுத்தலுக்கான சட்டங்களை மீறிய குற்றத்திற்காக கடந்த 24 மணித்தியாலங்களில் 41 நபர்களை கைது செய்துள்ளதாகவும், இதுவரை ஆயிரத்து 611 பேர் தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

சுகாதார வழிமுறைகளை மக்கள் முறையாக பின்பற்றுகிறார்களா? என்பதை கண்டறியும் வகையில் நேற்று முதல் ரயில்கள் மற்றும் பஸ்களில் சிவில் உடையில் பொலிஸார் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

06

## MCC ஒப்பந்தம் சொக்கலேட் தாள் சுற்றப்பட்ட வெடிகுண்டு

அரசின் கவனம் தேசிய பாதுகாப்பு, அரசியலமைப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



எம்.சி.சி. ஒப்பந்தம் சொக்கலேட் தாள் சுற்றப்பட்ட வெடிகுண்டு. தேசிய பாதுகாப்பு மற்றும் அரசியலமைப்பை பாதுகாக்கும் வகையிலேயே அது தொடர்பில் அரசாங்கம் உரிய தீர்மானத்தை எடுத்ததென வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தூரப்பார்வையுடன் செயற்பட்டு அந்த ஒப்பந்தத்திலிருந்து

06

## எட்டு பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்களின் துணைத் தலைவர்

செந்தில் தொண்டமானுக்கு அரசு புதிய பதவி



இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உபதலைவரும் பெருந்தோட்ட பிராந்தியங்களுக்கான பிரதமரின் இணைப்புச் செயலாளருமான செந்தில் தொண்டமான் பதுளை மாவட்டத்தின் எட்டு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்களின் துணைத் தலைவராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதன்படி பசறை, லுணுகலை, பண்டாரவளை, அப்புத்தளை, ஹல்தமுல்ல,

06

ஜனாஸாக்களை எரிப்பதா? புதைப்பதா?

## ஆராயும் குழுவில் மேலும் நிபுணர்களை இணைத்து சமநிலையில் செயற்பட சுகாதார அமைச்சு முடிவு



கொரோனா வைரஸினால் உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்கள் தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவில் மேலும் பலரை இணைத்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட குழுவில் மேலும் முஸ்லிம்களையும் தொற்றுநோய் நிபுணர்களையும் இணைத்துக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸினால் உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்கள் தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு மேலும் சமநிலை தன்மை மிக்கதாக காணப்படுவதற்கு மேலும் பலரை உள்வாங்கவேண்டும் என்ற வேண்டுகோள் விடுக்கப்பட்டது என அவர்

06

## தமிழ்க் கட்சிகள் ஓரணியில் செயற்படும் காலம் கனிந்துள்ளது

தமிழ்க் கட்சிகளுக்கு இரா.சம்பந்தன் அழைப்பு



தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தீர்வு காண்பதற்குத் தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் ஓரணியில் செயற்பட வேண்டிய காலம் கனிந்துள்ளது. இதை அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளும் உணரவேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான

06

## பண்டிகை காலத்தில் திருடர்கள் கைவரிசை

மக்களை எச்சரிக்கிறார் அஜித் ரோஹண

பண்டிகைக் காலம் நெருங்கி வருவதால் பொது மக்கள் திருடர்கள் மத்தியில் கவனமாகச் செயற்பட வேண்டும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண பொது மக்களுக்கு அறிவித்துள்ளார். பண்டிகைக் காலம் நெருங்கி வரும் நேரத்தில் குற்றவாளிகள் மற்றும் போதைப் பழக்கத்திற்கு அடிமையானவர்களின் நடவடிக்கைகள் எதிர்வரும் நாட்களில் அதிகரிக்கும் வாய்ப்புள்ளதால், நீங்கள் வீட்டிலிருந்து வெளியேறும் போது

06

## பொதுமக்கள் ஒத்துழைக்காவிடின் உயிரிழப்புகள் மேலும் அதிகரிக்கும்



## பலாலி விமான நிலையம் திறப்பு தொடர்பில் அடுத்த மாதம் ஆராய்வு

சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

## யாழ்.மாநகர மேயர் யார்? விரைவில் பேச்சுவார்த்தை

த.தே.மு மற்றும் EPDPயுடன் TNA பேச்சு

